# ஸ்ரீ சங்கராசார்ய கீதம்

கணேச சாஸ்திரிகள்

14.5.1966

ஸ்ரீ ஆசார்யர்களும் ஸ்ரீ புதுப் பெரியவர்களும், காலம் சென்ற பாங்கர் M. N. ராமஸ்வாமி ஐயரின் குமாரர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி மயிலாப்பூரில் 'ராம மந்திரம்' என்ற அவர்கள் கிருகத்துக்கு விஜயம் செய்து அங்கே தங்கி ஸ்ரீ சந்த்ரமௌளீச்வர பூஜை செய்தார்கள். அவ்வமயம் ஸ்ரீ கணேச சாஸ்திரிகள், 'ஸ்ரீ சங்கராசார்ய கீதம்' என்ற இந்த ச்லோகங்களை எழுதி வாசித்து ஸ்ரீ ஆசார்யர்களுக்குச் சமர்ப்பித்தார்கள்.

அப்பொழுது ஸ்ரீமான் நரஸிம்மனும் கிருஷ்ணனும் யானைக்குட்டி ஒன்றை ஸ்ரீ மடத்துக்குக் கொடுத்தார்கள்.

(शंभो महादेव देव என்ற மெட்டு)

श्रीशङ्कराचार्यवर्यम्, चन्द्रचूडावतारं भजे ज्ञानमूर्तिम्, श्रीशङ्कराचार्यवर्यम् ॥

ஸ்ரீசங்கராசார்யவர்யம், சந்த்ரசூடாவதாரம் பஜே ஜ்ஞாநமூர்த்திம்,
ஸ்ரீசங்கராசார்யவர்யம் ‖

கருத்துரை:—சந்திரனைத் தலையில் அணிந்த பரமேச்வரரின் அவதாரமானவரும், ஞானத்தின் வடிவமாக இருப்பவருமான ஸ்ரீ சங்கராசார்யரைப் பஜிக்கிறேன்.

अद्वैतसिद्धान्तमूलम्, द्वैतवादाख्यमत्तेभपञ्चास्यलीलम्,
भस्मत्रिपुण्ड्राङ्कफालम्, सूत्रभाष्यादिनिर्णीतवेदान्तभावम्,
श्रीशङ्कराचार्यवर्यम् ॥ १ ॥

அத்வைதஸித்தாந்தமூலம், த்வைதவாதாக்யமத்தேபபஞ்சாஸ்யலீலம்,
பஸ்மத்ரிபுண்ட்ராங்கபாலம், ஸூத்ரபாஷ்யாதிநிர்ணீதவேதாந்தபாவம்,
ஸ்ரீசங்கராசார்யவர்யம் ... ‖ 1 ‖

கருத்துரை:—அத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தவரும், த்வைதவாதம் என்ற மதங்கொண்ட யானை விஷயத்தில் சிங்கத்தின் பராக்கிரமமுடையவரும் (த்வைதவாதத்தை நிராகரித்தவரும்), விபூதியால் செய்த த்ரிபுண்டிரத்தினால் அலங்கரிக்கப்பட்ட நெற்றியையுடையவரும், ஸூத்திர பாஷ்யம் முதலிய கிரந்தங்களால் உபநிஷத்தின் கருத்தை நிர்ணயித்தவருமான ஸ்ரீ சங்கராசார்யரைப் பஜிக்கிறேன்.



kamakoti

नानाविधस्तोत्रगीतैः, सर्वलोकोपकारक्रियायां प्रवृत्तम्,
दुर्वादिवादाभ्रवातम्, दूरदूरास्तकामादिदुर्वैरिवृन्दम्,
श्रीशङ्कराचार्यवर्यम् ॥ २ ॥

நாநாவிதஸ்தோத்ரகீதை:,ஸர்வலோகோபகாரக்ரியாயாம் ப்ரவ்ருத்தம்
துர்வாதிவாதாப்ரவாதம், தூரதூராஸ்தகாமாதிதுர்வைரிப்ருந்தம்,
ஸ்ரீசங்கராசார்யவர்யம்... ‖ 2 ‖

**கருத்துரை:**—பல விதமான ஸ்தோத்திரங்களையும் பாடல்களையும் அமைத்து எல்லா ஜனங்களுக்கும் உதவி புரிந்தவரும், துர்வாதம் செய்பவர்களின் வாதமாகிற மேகத்தைத் தூரத்தில் தள்ளுகிற புயற்காற்ருக இருப்பவரும், வெகு தூரத்தில் தள்ளப்பட்ட ஆசை முதலிய கெட்ட சத்துருக்களையுடையவருமான ஸ்ரீ சங்கராசார்யரைப் பஜிக்கிறேன்.

काषायसंवीतगात्रं, यौवनश्रीसमाश्लिष्टसर्वाङ्गमीड्यम्,
कारुण्यसंपूर्णनेत्रम्, मन्दहासोल्लसद्वक्त्रमानन्दपात्रम्,
श्रीशङ्कराचार्यवर्यम् ॥ ३ ॥

காஷாயஸம்வீதகாத்ரம், யௌவநஸ்ரீஸமாச்லிஷ்டஸர்வாங்கமீட்யம்,
காருண்யஸம்பூர்ணநேத்ரம்,மந்தஹாஸோல்லஸத்வக்த்ரமாநந்தபாத்ரம்,
ஸ்ரீசங்கராசார்யவர்யம்... ‖ 3 ‖

**கருத்துரை:**—காஷாய வஸ்திரம் அணிந்தவரும், யௌவனப் பருவத்தினால் உண்டான அழகு பொருந்திய எல்லா அங்கங்களையுடையவரும், கருணை நிரம்பிய கண்களையுடையவரும், புன்னகையினால் விளங்குகிற முகமுடையவரும், நித்தியானந்தம் பொருந்தியவருமான ஸ்ரீ சங்கராசார்யரைப் பஜிக்கிறேன்.

शिष्यैश्चतुर्भिस्समेतम्, वामहस्तस्थवेदान्तसिद्धान्तकोशम्,
वीरासने सन्निषण्णम्, दक्षहस्ताग्रभागे लसज्ज्ञानमुद्रम्,
श्रीशङ्कराचार्यवर्यम् ॥ ४ ॥

சிஷ்யைஸ்சதுர்ப்பி:ஸமேதம்,வாமஹஸ்தஸ்தவேதாந்தஸித்தாந்தகோசம்,
வீராஸநே ஸந்நிஷண்ணம், தக்ஷஹஸ்தாக்ரபாகே லஸத்ஜ்ஞாநமுத்ரம்,
ஸ்ரீசங்கராசார்யவர்யம்.... ‖ 4 ‖

**கருத்துரை:**—நான்கு சிஷ்யர்களுடன் கூடியவரும், இடக் கையில் வேதாந்த ஸித்தாந்தம் அடங்கிய புஸ்தகத்தை வைத்துக்கொண்டிருப்பவரும், வீராஸனத்தில் அமர்ந்திருப்பவரும், வலக் கையில் ஞான முத்திரையைத் தரிப்பவருமான ஸ்ரீ சங்கராசார்யரைப் பஜிக்கிறேன்.

kamakoti

संसारदावाग्नितप्तं ज्ञानवृष्टिप्रदानेन लोकं समस्तम्,
दुःखत्रयान्मोचयन्तम्, नेत्रनिर्वाणसंदायिरूपं यतीन्द्रम्,
श्रीशङ्कराचार्यवर्यम् ॥ ५ ॥

ஸம்ஸாரதாவாக்நிதப்தம் ஜ்ஞாநவ்ருஷ்டிப்ரதாநேந லோகம் ஸமஸ்தம்,
து:கத்ரயாந்மோசயந்தம், நேத்ரநிர்வாணஸந்தாயிரூபம் யதீந்த்ரம்,
ஸ்ரீசங்கராசார்யவர்யம்... ‖ 5 ‖

**கருத்துரை:**—ஸாம்ஸாரிக துக்கமாகிற காட்டுத்தீயால் தாபம் அடைந்த எல்லா ஜனங்களையும், ஞானமாகிய மழையைப் பொழிந்து மூன்று விதமான துக்கத்திலிருந்து விடுவிப்பவரும், கண்ணைக் கவருகிற வடிவமுடையவருமான ஸ்ரீ சங்கராசார்யரைப் பஜிக்கிறேன்.

गोविन्दयोगीन्द्रशिष्यम्, शारदापीठनिक्षिप्तवागीशदारम्,
साक्षात्कृतब्रह्मतत्वम्, षण्मतस्थापकाचार्यकीर्त्या लसन्तम्,
श्रीशङ्कराचार्यवर्यम् ॥ ६ ॥

கோவிந்தயோகீந்த்ரசிஷ்யம், சாரதாபீடநிக்ஷிப்தவாகீசதாரம்,
ஸாக்ஷாத்க்ருதப்ரஹ்மதத்வம், ஷண்மதஸ்தாபகாசார்யகீர்த்யா லஸந்தம்,
ஸ்ரீசங்கராசார்யவர்யம்.... ‖ 6 ‖

**கருத்துரை :**—கோவிந்த யோகீந்திரர் என்ற ஸந்நியாஸியின் சிஷ்யரும், சாரதா பீடத்தில் பிரம்மதேவனின் மனைவியான ஸ்ரீ சாரதாதேவியைப் பிரதிஷ்டை செய்தவரும், பரப்பிரம்மத்தை நேரில் கண்டவரும், ஆறு மதங்களை ஸ்தாபித்தவர் என்ற புகழுடன் கூடியவருமான ஸ்ரீ சங்கராசார்யரைப் பஜிக்கிறேன்.

तत्तन्मठेषु स्वशिष्यान्, स्थापयित्वा स्वयं कामकोट्याख्यपीठे,
काञ्चीपुरस्थेऽधिरुह्य, सर्वलोकोपदेशक्रियायां प्रवृत्तम्,
श्रीशङ्कराचार्यवर्यम् ॥ ७ ॥

தத்தந்மடேஷு ஸ்வசிஷ்யாந் ஸ்தாபயித்வா ஸ்வயம் காமகோட்யாக்யபீடே
காஞ்சீபுரஸ்தேதிருஹ்ய, ஸர்வலோகோபதேசக்ரியாயாம் ப்ரவ்ருத்தம்
ஸ்ரீசங்கராசார்யவர்யம்... ‖ 7 ‖

**கருத்துரை :**—மற்ற மடங்களில் தம் சிஷ்யர்களை மதப் பிரசாரத்துக்காக ஸ்தாபித்து, காஞ்சீபுரத்தில் காமகோடி பீடத்தில் தாமே நேரில் வசித்துக்கொண்டு, எல்லா ஜனங்களுக்கும் மதோபதேசம் செய்த ஸ்ரீ சங்கராசார்யரைப் பஜிக்கிறேன்.



kamakoti

इत्थं गणेशेन गीतं स्तोत्रमेतत् पठेद्यः स्मरन् शङ्करार्यम्,
नश्यन्ति पापानि तस्य, ज्ञानलाभश्शुभानां भवेच्चाभिवृद्धिः,
श्रीशङ्कराचार्यवर्यम् ॥ ८ ॥

இத்தம் கணேசேந கீதம், ஸ்தோத்ரமேதத்படேத்ய: ஸ்மரந் சங்கரார்யம்,
நச்யந்தி பாபாநி தஸ்ய, ஜ்ஞாநலாப: சுபாநாம் பவேச்சாபிவிருத்தி:,
ஸ்ரீசங்கராசார்யவர்யம்... ‖ 8 ‖

**கருத்துரை:—** இவ்விதம் கணேச சாஸ்திரி என்ற கவி எழுதிய இந்த கீதத்தை ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களைத் தியானித்துக் கொண்டு எவர்கள் படிக்கிறார்களோ, அவர்களுக்கு எல்லா விதமான பாவங்களின் அழிவும், ஞானமும், மங்கள விருத்தியும் உண்டாகும்.

நியாய வ்யாகரண மீமாம்ஸா பாரங்கதரான ப்ரஹ்மஸ்ரீ
கணேச சாஸ்திரிகள் அமைத்த ஸ்ரீ சங்கராசார்ய கீதம் முற்றும்.

---

## திருமணங்கள் சிக்கனமாக நடத்த வேண்டும்:

ஸ்ரீ ஆசார்யர்களும் புதுப் பெரியவர்கள் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் அருளியது:—

இக்காலத்தில் திருமணங்கள் பெரும்பாலும் வியாபார விஷயங்கள் போல ஆகிவிட்டன. ஆடம்பரங்கள் அதிகரித்துவிட்டன. இந்த நிலைமை மாறி திருமணத்தின் புனிதத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும். அநாவசிய செலவுகளைத் தவிர்க்க வேண்டும். திருமணங்களுக்கு மங்களகரமான புடவைகள் அவசியமே என்றாலும், அதிக விலை கொடுத்து அவற்றை வாங்க வேண்டியதில்லை. இன்று அநேகக் குடும்பங்கள் திருமணச் செலவுகளால் பெருங் கடன்பட்டு உழலுகின்றன. இதைத் தவிர்க்க வேண்டும். ஜாதகங்கள் பொருந்தி, பையனுக்கும் பெண்ணுக்கும் பிடித்திருந்தால், வரதட்சிணை கேட்காமல் பெண்ணைப் பையன் மணந்துகொள்ள வேண்டும். திருமங்கல்யம் போன்றவைகளைச் செய்தால் போதும். எப்படியும் ஒரு திருமணத்துக்கு ரூ. 500க்கு மேல் செலவு செய்யக் கூடாது. விளம்பரத்தைக் குறைக்க வேண்டும். திருமண விழாவை ஒரு நாளில் முடித்து, விருந்தினர்களும் பந்துக்களும் முதல் நாளே போய்விட்டாலும், மாப்பிள்ளையும் மணப்பெண்ணும் அதே இடத்தில் நாலு நாள் இருந்து, சாஸ்திரோக்தமாக அக்கினி உபாஸனம் செய்ய வேண்டும். உறவினர்களும் நண்பர்களும் பண்டங்களாகப் பரிசளிப்பதற்குப் பதில், பயனுள்ள முறையில் ரொக்கமாகத் தரலாம். திருமணச் செலவுக்காக வாங்கிய கடனை அடைக்க இந்த ரொக்கப்பணம் உதவும்.

kamakoti